<u>**DEPOSITION OF WITNESS**</u>

<u>**In the Court of Judicial Magistrate No.II, Mettur**</u>

**Case No : C.C. 59/2016**

**Prosecution witness : அ.சா.9** **Date : 04.12.2024**

| | |
|---|---|
| **Name : சந்தோஷ்குமார்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 1 to 11 absent. Petition filed and allowed)**

<u>**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

1) நான் எந்த நேரத்தில் பணியில் இருந்த போது காவல் துறையினரால் அழைக்கப்பட்டேன் என்றால் காலை 05.30 மணி இருக்கும். எனக்கு தகவல் கிடைத்த உடன் நான் உடனடியாக சென்றுவிட்டேனா என்றால் 15 நிமிடத்தில் சென்றுவிட்டேன். எதற்காக அழைத்தார்கள் என்றால் திருட்டு வழக்கு சம்மந்தமாக விசாரிக்க அழைத்தன் பேரில் நான் சென்றேன். நான் அங்கு செல்லும் போது எவ்வளவு நேரம் இருக்கும் என்றால் 05.50 இருக்கும். நான் செல்லும் போது அங்கு எவ்வள்வு இருந்தார்கள் என்றால் 2 பேர் மட்டுமே இருந்தார்கள். வேறு யார் இருந்தார்கள் காவல் ஆய்வாளர் மற்றும் காவலர்கள் இருந்தார்கள்.

2) நான் சென்ற பின்னிட்டு ஒப்புதல் வாக்குமூலம் பதியப்பட்டது என்றால் ஆமாம். எந்த இடத்தில் பதியப்பட்டத என்றால் பெட்ரோல் பங்க் கில் பதியப்பட்டது. முதலில் யார் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள் என்றால் சங்கர் என்பவர் கொடுத்தார். யார் தட்டச்சு செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. எதில் வைத்து தட்டச்சு செய்தார் என்றால் லேப்டாப்பில் வைத்து தட்டச்சு செய்தார்கள். அப்போது நான் எங்கிருந்தேன் என்றால் அருகே இருந்தேன். எந்த இடத்தில் வைத்து தட்டச்சு செய்யப்பட்டது என்றால் பெட்ரோல் பங்க் சேர் மீது அமர்ந்து டேபிள் மீது வைத்து தயார் செய்தார்கள்.

3) எவ்வளவு நேரம் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் 1 .15 மணிநேரம் தட்டச்சு

செய்யப்பட்டது. தட்டச்சு செய்த இடத்தில் வைத்து கையொப்பம் செய்யப்படவில்லை என்றால் வெளியே சென்று பிரிண்ட் அவுட் எடுத்து பிறகு கையொப்பம் செய்தேன். எந்த கடையில் பிரிண்ட் அவுட் எடுத்தார்கள் என்றால் தற்போது எனக்கு நினைவில்லை.காலை 7.30 ஒருவரிடமும், 06.00 மணிக்கு ஒருவரிடமும் கையொப்பம் வாங்கினார்கள். திரும்ப பெட்ரோல் பங்க்கிற்கு வந்து கையொப்பம் 08.30 மணிக்கு கையொப்பம் காவல் ஆய்வாளர் எங்களிடம் வாங்கினார். நானும் கிராம உதவியாளரும் சாட்சி கையொப்பம் செய்தோம். வேறு யார் இருந்தார்கள் என்று ஞாபகம் இல்லை.

4) பின்னர் அன்றைய தினம் காலை 08.30 மணிக்கு திருப்பூர் சென்றோம். நான், என்னுடைய உதவியாளர், எதிரிகள் இருவர் ஆகியோர் எந்த வண்டி என்று எனக்கு தெரியாது அந்த நேரத்திலே நாங்கள் திருப்பூர் சென்றுவிட்டோம். என்னுடைய வருவாய் ஆய்வாளரிடம் வாய்மொழியாக நாங்கள் திருப்புர் செல்கிறோம் என்று என்னுடைய உயர் அதிகாரிக்கு தகவல் தெரிவித்து சென்றதோம். சார் அட்சியர் அவர்களிடம் தகவல் எதுவும் சொல்லவில்லை. திருப்பூர் செல்லும் போது எந்த உணவகத்தில் உணவு அருந்தினோம் என்றால் சாப்பிடவில்லை. திருப்புருக்கு எத்தனை கீ.மீ என்றால் நினைவில்லை.

5) சுமார் 12.00 மணிக்கு திருப்பூர் சென்றோம். எந்த கிராமம் என்று தெரியாது. அமரஜோதி கார்டனில் சுரேந்தர் என்பவரது வீட்டிற்கு சென்றோம். சுரேந்தர் அவரது வீட்டில் அவர் மட்டும் தான் இருந்தார். அவரது என்ன வகையான வீடு என்பதை நான் தெரிந்துகொள்ளவில்லை. சுரேந்தர் 1000 ரூபாய் நோட்டுகளை எந்த இடத்தில் இருந்து எடுத்துக்கொடுத்தார் என்று தெரியவில்லை. அனைத்து நோட்டுகளும் 1000 ரூபாய் நோட்டுகள் அனைத்தையும் எடுத்துக்கொடுத்தார். அதன் பின்னர் கொடுவாய் என்ற ஊருக்கு சென்றோம் அங்கு செந்தில்குமார் என்பவர் வீட்டில் இருந்தார். அந்த வீடு என்ன வீடு என்பதை தெரிந்துகொள்ளவில்லை. அப்போது 02.15 மணி இருக்கும். அவர் வீட்டில் பேசிக்கொண்டிருந்தார்.

6) செந்தில்குமார் வீட்டின் முன்பு ஆறுமுகம் ரமேஷ் குமார், சாதிக் பாட்ஷா,

சுரேஷ்குமார் ஆகியோர்கள் வீட்டின் முன்பு பேசிக்கொண்டிருந்தார்கள். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள பொருட்களை வீட்டில் இருந்து எடுத்துக்கொடுத்தார் எந்த இடத்தில் இருந்து எடுத்தார் என்றால் தெரியாது. அவரது வீடு என்ன வீடு என்று தெரியாது. ரமேஷ் என்பவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார்கள். அனைத்தும் கணினியில் தயார் செய்தார்கள். ஒப்புதல் வாக்குமூலம் வாங்குவதற்கு 1 மணி நேரம் பொருட்களை கைப்பற்றுவதற்கு 1 மணி நேரம் ஆனது என்றால் சரிதான். முதலில் எந்த பொருட்களை எடுத்து வந்து கொடுத்தார் என்றால் தெரியாது.

7) 2 கையெழுத்து செந்தில் குமாருக்கு போட்டோம். பிரிண்ட் அவுட் எங்கு எடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. காவலர் தட்டச்சு செய்தார் அவர் யார் என்று எனக்கு தெரியாது. அனைத்து கையெழுத்தும் அங்கேயே தான் வாங்கினார்கள். வேறு எங்கும் நாங்கள் செல்லவில்லை நேராக மேச்சேரி வந்துவிட்டோம். நாங்கள் அனைவரும் காவலர் வாகனத்தில் வந்தோம். அங்கு வேறு யாரிடமும் சாட்சி கையொப்பம் வாங்கவில்லை. பொதுமக்கள் யாரும் கூடவில்லை என்றால் சரிதான். சுமார் 11.00 மணியளவில் சாந்தி என்பவரது வீட்டை சங்கர் என்பவர் அடையாளம் காட்டினார். ரமேஷ்குமார் என்பவரது ஒப்புதல் வாக்குமூலம் கையெழுத்து செய்தேன். ஆறுமுகம் என்பவரது ஒப்புதல் வாக்குமூலத்திலும் கையொப்பம் செய்தேன். பின்னர் காவல் நிலையத்திற்கு வந்தோம் என்றால் ஆமாம். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றால் ஆமாம்.

8) என்னிடம் இரவு சுமார் 11.00 மணியளவில் காவல் நிலையத்தில் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். குறுக்குவிசாரணையில் சொன்னபடி தான் காவல் ஆய்வாளரிடமும் சொன்னேன். அதன் பின்னர் வேறு எங்கும் காவல் ஆய்வாளர்கள் என்னை கூட்டிசெல்லவில்லை. வேறு எந்த பொருட்களையும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். பொருட்கள் அனைத்தையும் எடைபோட்டார்கள் ஆனால் எடைபோட்டவர் அதிகாரியா, அவர் யார், எந்த ஊரை சேர்ந்தவர் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் சொன்னது போல் சொன்ன

நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.